## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 24.02.2022 வியாழக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி-2022 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | 37 | **பதிவு செய்யப்பட்டது** |
| 02 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்த உதவியாக மதிப்பீடுகள் தயார் செய்யவும், பணிகளை மேற்பார்வையிடவும் தொழில் நுட்ப பணியாளர் ஒருவரை மாவட்ட ஆட்சியர், திருவாரூர் அவர்களின் தினக் கூலி நிர்ணய ஆணை 2021-2022ன்படி தினக் கூலி அடிப்படையில் பணி முடியும் வரை அமர்த்திக்கொள்ளவும், இதற்கான செலவினம் ஓராண்டிற்கு ரூ.1.50இலட்சம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. | 38 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தனி அலுவரின் முன் அனுமதி பெற்று ஒரு பணியாளர் நியமித்த இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண்:2352/2021/இ1</u>** | | |
| **03** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.150.00 இலட்சம் (ரூபாய் நூற்றி ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கிலான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிகள் மேற்கொள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள், விளம்பரங்கள், பத்திரிக்கை விளம்பரம் மற்றும் செலவினங்கள் ஓராண்டிற்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கும் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ரூ.150.00இலட்சதிற்கு (ரூபாய் நூற்றி ஐம்பது இலட்சம் மட்டும்) விரிவான திட்ட அறிக்கைக்கும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>(2352/2021/இ1)</u>** | **39** | **அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>04</td>
<td>இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள வார்டுகளுக்கு கொரோனா இரண்டாம் அலை வேகமாக பரவி வருவதால் நகராட்சிப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட ஒலிப்பெருக்கியின் மூலம் விளம்பரம் <u>14.11.2021 முதல் 22.01.2022 வரை 13 நாட்கள்</u> தேவா பப்ளிசிட்டி டிஜிட்டல் ஸ்டுடியோ திருத்துறைப்பூண்டி அவர்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ரூ.32500/- (ரூபாய் முப்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கிட மன்றப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. அனுமதி வழங்கலாம்.<br><br>2. இந்நகராட்சியில் கொரோனா இரண்டாம் அலை வேகமாக பரவி வருவதால் நகராட்சிப் பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தேவா பப்ளிசிட்டி டிஜிட்டல் ஸ்டுடியோ திருத்துறைப்பூண்டி அவர்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண் 811/2021/எச்1)</u></td>
<td>40</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>05</td>
<td>இந்நகராட்சியின் உள்ளாட்சி தேர்தல் 2021 முன்னிட்டு வார்டு எண்.1 முதல் 24 வரையிலான பகிர்மான குழாய் உடைப்புக்கான உதிரிபாகங்கள் மற்றும் கைப்பம்புகளுக்கான உதிரிபாகங்கள் வாங்கும் பணிகள் மேற்கொள்ள. 09.02.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>M/S.லெட்சுமி பைப்ஸ் அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துறைப்பூண்டி</td><td>126126.00</td></tr>
</table></td>
<td>41</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>M/S.ராஜம் பைப் ஏஜென்சி, திருத்துறைப்பூண்டி</td><td>137646.00</td></tr>
<tr><td>3</td><td>M/S.பைப்ஸ் இண்டியா கார்ப்பரேஷன், திருத்துறைப்பூண்டி</td><td>146142.00</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:
<ol>
<li>மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட ரூ.126126.00 குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.லெட்சுமி பைப்ஸ் அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.</li>
</ol>
<u>(ந.க.எண் 2378/2021/இ1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>06</td>
<td>இந்நகராட்சியின் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்-2022ஐ முன்னிட்டு வேட்பு மனுக்களை மாநில தேர்தல் ஆணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு போதிய கணிணி இல்லாத காரணத்தினால் கணிணி உபகரணங்கள் வாங்கும் பணிகள் மேற்கொள்ள 10.02.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>M/S.Veersun Global Enterprises, Korattur, Chennai.</td><td>977836.00</td></tr>
<tr><td>2</td><td>M/S.Global Traders, Madurai.</td><td>991908.00</td></tr>
</table>
</td>
<td>42</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>

| | | |
|---|---|---|
| 3 | M/S.VelGroups,Valasaravakkam, Chennai | 1028960.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட ரூ.977836.00 குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.Veersun Global Enterprises, Korattur, Chennai என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண் 044/2022/இ1)**

</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>07</td>
<td>

இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கையில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் வீடு வீடாக சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முற்றிலும் தற்காலிக முறையில் டெங்கு தடுப்பு மஸ்தூர் Domestic Breeding Checker 17 நபர்கள் பணிக்கு அனுப்புதல், பணிக்கு The Karan Social Development Foundation, Mannargudi நிறுவனத்தின் மூலம் 30.11.2021-ல் மூன்று மாதங்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மார்ச்-2022 ஒரு மாத காலத்திற்கு உத்தேச தொகையாக ரூ.2.50இலட்சமாகும்.

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-28 அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான தொகையினை தூய்மை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தரவு வெளியிட இருப்பதால் தற்போது பணிப்பார்த்து வரும் The Karan Social Development Foundation, Mannargudi நிறுவனத்திற்கு ஒப்பந்த பணியினை அதே விலை விகிதத்தில் மார்ச்-2022ஆம் மாதத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்து வழங்கிட ஆகும் செலவினத்திற்கு மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

</td>
<td>43</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** நகராட்சியின் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் டெங்கு தடுப்பு பணிக்கு மன்றம் அனுமதி வழங்கிடலாம்.<br>**(ந.க.எண் 1818/2020/எச்1)** | | |
| **08** | இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணி தனியார் பங்களிப்புடன் (outsourcing) தினசரி 45 நபர்களை பணிக்கு அனுப்புதல் பணிக்கு MSG Infra, Thanjavur நிறுவனம் மூலம் 30.11.2021ல் மூன்று மாதங்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மார்ச்-2022 ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.9.00இலட்சமாகும். நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-28 அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான தொகையினை தூய்மை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தரவு வெளியிட இருப்பதால் தற்போது பணிப்பார்த்து வரும் MSG Infra, Thanjavur நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை அதே விலை விகிதத்தில் மார்ச்-2022 ஒரு மாதத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்து வழங்கிட ஆகும் செலவினத்திற்கு மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** நகராட்சியின் நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மன்றம் அனுமதி வழங்கிடலாம்.<br>**(ந.க.எண் 1716/2020/எச்1)** | **44** | **அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>09</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2021-2022-ன்கீழ் வார்டு எண்.3 குட்ஷெட் தெருவில் சிறுபாலம் பழுது நீக்கும் பணி ரூ.3.30இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பணியின்பெயர்</td><td>மதிப்பீடு<br>ரூ.இலட்சத்தில்</td></tr>
<tr><td colspan="3"><u>பொதுநிதி2021-2022</u></td></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.3 குட்ஷெட் தெருவில் சிறு பாலம் பழுது நீக்கும் பணி</td><td>3.30</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>3.30</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
1. பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை உடன் துவங்க இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண்.445/2022/இ1</u>
</td>
<td>45</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>10</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2021-2022-ன்கீழ் வார்டு எண்.5 செங்கமலத் தெருவில் சிறுபாலம் பழுது நீக்கும் பணி ரூ.1.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின்பெயர்</th><th>மதிப்பீடு<br>ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td colspan="3"><u>பொதுநிதி2021-2022</u></td></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.5 செங்கமலத் தெருவில் சிறு பாலம் பழுது நீக்கும் பணி</td><td>1.00</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>1.00</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு:<br>
1. பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை உடன் துவங்க இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண்.445/2022/இ1</u></td><td>46</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>11</td>
<td>

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2021-2022-ன்கீழ் வார்டு எண்.14 சண்முகம் செட்டித் தெருவில் மழைநீர் வடிகால் பழுது நீக்கம் செய்யும் பணி ரூ.1.30இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின்பெயர்</th><th>மதிப்பீடு<br>ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td colspan="3"><u>பொதுநிதி 2021-2022</u></td></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.14 சண்முகம் செட்டித் தெருவில் மழைநீர் வடிகால் பழுது நீக்கம் செய்யும்பணி</td><td>1.30</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>1.30</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு:**

1. பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை உடன் துவங்க இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**<u>ந.க.எண்.445/2022/இ1</u>**

</td>
<td>47</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **12** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0)ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளின் வரைபடத்தினை GIS வரைபடமாக கூகுல் (Google) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களின் உத்தரவுப்படி தேசிய அளவிலான நகரங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் நகராட்சியின் எல்லை மற்றும் வார்டு வரைபடங்களை கணிணிமையத்தில் பதிவேற்றம் செய்ய வார்டு ஒன்றுக்கு ரூ.400/-வீதம் 24 வார்டுகளுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.9600/- (ரூபாய் ஒன்பதினாயிரத்தி அறுநூறு மட்டும்) செலவினத்தினை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) GIS வரைபடமாக இணைய தளத்தில் பதிவு செய்ய ஆகும் செலவினம் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.486/2022/எச்1** | **48** | **அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ என்.சந்திரசேகரன்,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/